ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

02.07.2026

1. ஞானிகள் தனை உலகில் படைக்க
ஞானதேசிகனும் பிரணவக் குடிலை
கனிவேலவன் ஆசிபட உருவாக்கி
கலியுகத்தில் அற்புதம் நடத்தி வர

2. வருகவே உலக மக்களெல்லாம் என்பால்
வணங்கிவர மாற்றம் பெறுவீரென
குருவார அருளாசிதனை அரங்கனும்
குறைவிலா பராபவ மிதுன திங்கள்

3. திங்களிலே சூலவாம் குருவார அருளாசி
தொண்டர்கள் நலம்பெற உரைப்பேன்
ஓங்கார ஞானத் தெளிவு காண
ஓங்கார குடிலை அணுகி வந்து

4. வந்துமே சன்மார்க்க நெறிதனை
வல்லமைபட ஏற்றுப் பணிந்து
சிந்தை முழுக்க சைவம்தனை ஏற்று
சோதி வழிபாடுதனை செய்து

5. செய்துமே அரங்கன் யான் வகுத்த
சிறப்பான அன்னதான வழிகளை
அய்யமற ஏற்றுப் பொருளுதவி
அணுகி அரங்கன் என் வழியில் செய்து

6. செய்துமே ஆசி தீட்சை தன்னை
செப்பிடுவேன் என் சீடர் ராம்குமாரின்
மெய்ஞான கரம்பட ஏற்றுமே
மேலான ஞானிகள் பூசைதனை

7. பூசைதனை செய்து வருதலுற
புண்ணிய பலமுடன் வருபவர்கட்கு
நேசம்பட ஞானிகள் ஆசி கூடி
நிலவுலகில் காரிய வெற்றி காணும்

8. காணவே ஞானிகள் படைகள்
கலியினில் உருவாகி இனிதே
ஞான ஆட்சிக் காலமாகுமினி
நம்பிக்கை தரும் ஆளுமை பெருகி

9. பெருகியே இந்தப் பேருலகில்
பெருமை மிக்க மாற்றமும்
பொருளாதார பலமும் பெருகி
புண்ணிய உலகாக மாற்றம் காணும்

10. காணவே அரங்கன் என் அவதார
கலியுக வெளிப்பாடு நிறைவேறும்
ஞானத் தலைமையாக மாற்றம்
ஞானபூமி தமிழகம் தொட்டு துவங்கி

11. துவங்கி இந்திய தேசமுழுக்க
தொடர் மாற்றம் கண்டு
அவணியே ஏற்றம் மாற்றம்
ஆறுமுகப் பெருமானால் அடையும்
அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி